# காஞ்சிபுரம் மாநகராட்சி
# கூட்ட எண்.10/2022-2023

## கூட்டப் பொருள்கள்

**1.** காஞ்சிபுரம் மாநகராட்சியின் ஆணையாளர் அவர்களின் நவம்பர்-2022 மாத நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.165/2021/சி1)

**தீர்மான எண். 607 பதிவு செய்யப்பட்டது.**

**2.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் நவம்பர் – 2022 ஆம் மாதத்தில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்த விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பிறப்பு | 87 | 109 | - | 196 |
| இறப்பு | 67 | 63 | - | 130 |

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.3675/2022/சி3)

**தீர்மான எண். 608 பதிவு செய்யப்பட்டது.**

**3.** காஞ்சிபுரம் மாநகராட்சியின் 2021-2022 ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.8949/2022/சி1)

**தீர்மான எண். 609 பதிவு செய்யப்பட்டது.**

**4.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் வேகத்தடை அமைக்கப்பட்டு உள்ள பிரதான இடங்களில், இரவு நேரங்களில் வேகத்தடை இருப்பதை அறிந்து வாகன ஒட்டிகள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பாடாதவண்ணம், மேற்கண்ட சாலைகளில் வெள்ளை பூச்சு கொண்டு லைன் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 610 அனுமதி அளிக்கப்பட்டது.**

**5.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் புத்தக கண்காட்சி திருவிழா 23.12.2022 முதல் 02.01.2023 வரை நடைபெற உள்ளது. எனவே மேற்படி புத்தக கண்காட்சியில் கலந்து கொள்ளும் அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்களின் சுகாதார

நலன் கருதி கண்காட்சி நடைபெற்று முடியும் வரை தற்காலிகமாக நடமாடும் கழிவுறைகள் (Mobile Toilet) அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.61 இலட்சம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1001/2022/இ2)**

**தீர்மான எண். 611 அலுவலக குறிப்பின்படி அனுமதி வழங்கப்பட்டது.**

**6.** காஞ்சிபுரம் மாநகராடசிக்குட்பட்ட வார்டு எண்.24–ல் அமைந்துள்ள கே.எம்.வி. நகரில் புதைவடிகால் அடைப்பு அடிக்கடி ஏற்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக மாமன்ற உறுப்பினர் அவர்களும், பொது மக்களிடமிருந்தும் புகார்கள் வந்தவண்ணம் இருப்பதால், மேற்கண்ட இடத்தில் புதைவடிகால் தொட்டியில் மின்மோட்டார், HDPE பைப் மற்றும் கேபிள் புதைத்து தாழ்வான பகுதியில் இருந்து சி.எஸ். செட்டி தெருவில் அமைந்துள்ள புதைவடிகால் தொட்டியில் இணைப்பு ஏற்படுத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.38 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 612 அனுமதி அளிக்கப்பட்டது.**

**7.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20-ல் அமைந்துள்ள கோட்ட கொல்லை சுப்புராயர் தெருவில் அடிக்கடி புதைவடிகால் கசிவு ஏற்படுவதாக பொதுமக்களின் புகாரின் பேரில், மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டு தாழ்வான பகுதியில் உள்ள புதைவடிகால் தொட்டியில் இருந்து மின்மோட்டார் பொருத்தி, பைப்லைன் மூலம் கழிவுநீர் வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.22 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 613 அனுமதி அளிக்கப்பட்டது.**

**8.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கீழ்குறிப்பிட்டுள்ள இப்பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15-ன் கீழ் கீழ்குறிப்பிட்ட விவரப்படி பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | நத்தப்பேட்டை உரக்கிடங்கு சாலைகளில் உள்ள மக்காத குப்பைகளை அகற்றிடும் பணி. | 7.20 | திரு.P.விஜயரகுநாதன். |

அலுவலகக் குறிப்பு

பொது நிதியில் பணி கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 614 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

9. 2021 வடகிழக்கு பருவ மழை காலத்தில் காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதிகளில் மழை வெள்ளத்தால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் தற்காப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு 1920-ம் வருடத்திய மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ன் கீழ் குறிப்பிட்ட பணிகள் மேறகொள்ளப்பட்டதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) | பணியின் மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | வட கிழக்கு பருவமழை 2021-ன் போது மழைநீரை வெளியேற்ற 5 எண்ணிக்கையிலான டீசல் மோட்டார். JCB இயந்திரம் (ம) கான்கிரீட் உடைக்கும் இயந்திரம் மூலம் கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளுதல். | 4.90 | 4,88,202/- | திரு.P.விஜயரகுநாதன் |

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.314/2021/E1)

**தீர்மான எண். 615 பதிவு செய்யப்பட்டது.**

10. காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட திருப்பாற்கடல் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வேகவதி நீருந்து நிலையத்திற்கு வரும் 600 MM PSC பிரதான குடிநீர் பைப்லைனில் களத்தூர் முதல் சங்கரம்பாடி பகுதி வரையில் அடைப்பு ஏற்பட்டுள்ளதை அகற்றி அவ்விடத்தில் 600 mm Fabricated Pipe Socket Spigot பொருத்துதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6.10 இலட்சத்திற்கும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.A.அரவிந்தன், அவர்கள் மூலம் நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 616 பதிவு செய்யப்பட்டது.**

11. காஞ்சிபுரம் மாநகராட்சியில் கீழ்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளிகள் கோர கால அவகாசம் இல்லாத காரணத்தால் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு உரிய செலவினம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) | பணியின் மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் மாநகராட்சி அண்ணா தெருவில் அமைந்துள்ள முன்னாள் முதல்வர் திருமிகு. C.N. அண்ணாதுரை அவர்களின் நினைவு இல்லத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.06.2021 அன்று வருகை புரிந்தபோது | 0.60 | 62,869/- | திரு.P.விஜயரகுநாதன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொதுமக்களிடமிருந்து பாதுகாத்திட பாதுகாப்பு அரண்கள் (Barricading) அமைக்கும் பணியினை மேற்கொள்ளுதல். | | | |

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.314/2021/E1)

**தீர்மான எண். 617 பதிவு செய்யப்பட்டது.**

12. காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட திருப்பாற்கடல் தலைமை நீரேற்றும் நிலையத்தில் மின்தடை ஏற்படும் நேரங்களில் தொடர்ந்து மின்மோட்டார்கள் இயக்கிட 200 KVA ஜெனரேட்டர் நிறுவப்பட்டுபயன்பாட்டில் உள்ளது. தற்போது இந்த ஜெனரேட்டர் இயக்கத்தின் போது சீரற்ற நிலை ஏற்பட்டு அடிக்கடி Trip ஆகிறது அங்கீகாரம் பெற்ற Kirloskar Ultimate Power Source – Vellore என்ற நிறுவனத்தால் சோதனை செய்யப்பட்டதில் அதன் கன்ரோலர், தெர்மோஸ்டாட், பில்டர்கள் மற்றும் ஆயில் மாற்றி புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ள கோரியுள்ளனர். இதற்கான உத்தேச செலவீனம் ரூ.45,000/- ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஜெனரேட்டர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண்.547 நாள்.30.11.2022-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி அங்கீகாரம் பெற்ற Kirloskar Ultimate Power Source – Vellore நிறுவனத்தினர் மூலம் பணி மேய்கொள்ளவும், அதற்காகும் தொகைக்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் விநியோக பணிகளின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Kirloskar Ultimate Power Source, Vellore அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ2)

**தீர்மான எண். 618 அலுவலக குறிப்பின்படி அனுமதி வழங்கப்பட்டது.**

**13.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட அறப்பெருஞ்செல்வி தெருவில் உள்ள அனுமதியற்ற குடியிருப்பு கட்டிடத்தினை சென்னை உயர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.719/2021 (ம) 56/2022-ன் படி இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டி இப்பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15-ன் கீழ்குறிப்பிட்ட விவரப்படி பணி மேற்கொண்டமைக்கும் அதன் செலவினத்துக்கும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட அறப்பெரும் செல்வி தெரு, கதவு எண்.38-யில் உள்ள அனுமதியற்ற குடியிருப்பு கட்டிடத்தினை நீதிமன்ற உத்திரவின்படி இடித்து அப்புறப்படுத்தும் பணி | 4.70 | திரு.P. விஜயரகுநாதன் |

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 619 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**14.** காஞ்சிபுரம் மாநகராட்சி வார்டு எண்.11, கச்சியப்பன் தெருவில் ரூ4.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணிக்கு மாமன்ற தீர்மான எண்.429, நாள்.30.08.2022-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 15.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு திரு.M. வெங்கடகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் 0.06 சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியதின் பேரில் மாமன்ற தீர்மானம் எண்.465, நாள்.29.09.2022 எண்ணிட்ட அனுமதியின்படி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது 11-வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் 11-வது வார்டில் செங்குந்தர் நகர் பகுதியில் மழைக்காலங்களில் அதிக மழைநீர் தேங்குவதாலும் குடியிருப்புகள் இப்பகுதியில் அதிகமாக இருப்பதாலும் மேற்கண்ட கச்சியப்பன் தெருவில் மேற்கொள்ளவுள்ள மழைநீர் கால்வாய் அமைத்தல் பணியினை செங்குந்தர் நகர் பகுதிக்கு மாறுதல் செய்ய கோரியுள்ளார். எனவேஇப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M. வெங்கடகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் அதே விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ள ஒப்புதல் கடிதம் வழங்கி உள்ளதால் செங்குந்தர் நகர் பகுதியில் பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1001/2022/இ2)

**தீர்மான எண். 620 அனுமதி வழங்கப்பட்டது.**

**15.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் பொது நிதிப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்கு உண்டான மதிப்பீடுகள், வரைபடங்கள் ஆகியவற்றை தயார் செய்திடவும் மற்றும் புதிய திட்டப்பணிகள் மேற்கொள்ள அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்க தேவையான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், ஐந்து எண்ணிக்கையிலான தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் பொறியியல் பிரிவு சம்மந்தமான கடிதங்களை உடனுக்குடன் தட்டச்சு செய்யவும் Online மூலம் முன்னேற்ற அறிக்கைகள் கணினியில் பதிவேற்றம் செய்து அனுப்பிட இரு எண்ணிக்கையிலான புள்ளி விவர குறிப்பாளர்கள், ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ஒரு ஆண்டுக்கு ரூ.24.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.12091/2022/இ1)

**தீர்மான எண். 621 அனுமதி அளிக்கப்பட்டது.**

**16.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 2022-23 15வது நிதி குழும மானிய திட்டத்தின் கீழ் நகர நலவாழ்வு மையங்கள் மற்றும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு கூடம் அமைத்தல் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 அவர்களின் கடித ந.க.எண்.35132/2022/ CFC-1,, நாள்.12.10.2022 ல் கோரியுள்ளதற்கிணங்க, கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் விவரம் | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 3 | தேரடி தெருவில் நகர நலவாழ்வு மையம் அமைத்தல். | 25.00 |
| 2 | 27 | முருகன் குடியிருப்பு பகுதியில் நகர நலவாழ்வு மையம் அமைத்தல். | 25.00 |
| 3 | 44 | வானவில் நகர் பகுதியில் நகர நலவாழ்வு மையம் அமைத்தல். | 25.00 |
| 4 | 46 | சண்முகா அவென்யூ (ஓரிக்கை) பகுதியில் நகர நலவாழ்வு மையம் அமைத்தல். | 25.00 |
| 5 | 49 | பாரதிதாசன் நகர் பகுதியில் நகர நலவாழ்வு மையம் அமைத்தல். | 25.00 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 51 | விஷ்ணு நகர் பகுதியில் (ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் ஆய்வு கூடம் அமைத்தல் பணி. | 22.00 |
| | | மொத்தம் | 147.00 |

அலுவலக குறிப்பு :-

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

***தீர்மான எண். 622 அனுமதி அளிக்கப்பட்டது.***

**17.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2022 ன் கீழ் பணியின் அவசர அவசியம் கருதி கீழ்குறிப்பிட்டுள்ள பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15 ன் கீழ், மேற்கொண்டமைக்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 51 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு புயல் மற்றும் கனமழை எச்சரிக்கை குறித்து அரசு வழிகாட்டுதல் மூலம் தெரிவித்து விவரங்களை (ஸ்பீக்கர், மைக், ஆம்பிளிபையர், பேட்டரி மற்றும் ஆட்டோ உட்பட) விழிப்புணர்வு பிரச்சாரம் ஏற்படுத்தும் வகையில் 4 எண்ணிக்கையிலான ஆட்டோத்தும் மூலம் 4 மண்டலங்களுக்கும் ஒலிபெருக்கி பிரச்சாரம் செய்யும் பணி. | 27,000/- | M/s. Auto Sound Service, நெ.1059, எம்.ஜி.ஆர் நகர், திருக்காலிமேடு, காஞ்சிபுரம். |

**அலுவலக குறிப்பு :-**

**மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)**

***தீர்மான எண். 623 ஒப்புதல் அளிக்கப்பட்டது.***

**18.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் புத்தக கண்காட்சி திருவிழா 23.12.2022 முதல் 02.01.2023 வரை நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ளும் அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்களின் சுகாதார நலன் கருதி கடித ந.க.எண்.12824/2022/எம்-1 ன் படி, தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அத்தியாவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மாவட்ட ஆட்சியரின் அறிவுரைக்கிணங்க மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் 26 எண்ணிக்கை கழிப்பிடங்கள் தற்காலிகமாக அமைக்க வேண்டி உள்ளது. எனவே வாடகை அடிப்படையில் வாங்கி பொருத்தி பராமரிக்க வேண்டி உள்ளது. ஆதலால் 11 நாட்களுக்கு வாடகை அடிப்படையில் கழிப்பிடங்கள் அமைக்கும் பொருட்டு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.61 இலட்சத்திற்கு 16.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி M/s.SK Sanitaz, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

***தீர்மான எண். 624 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.***

**19.** காஞ்சிபுரம் மாநகராட்சி குடிநீர் விநியோக நிதிக்கணக்கில் 2022-23ம் ஆண்டு வரவுசெலவு திட்டத்தில் கணக்கு எண்.2305009 (Function No.51) ல் ரூ.1,75,00,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு 11/2022 வரை செலவலிடப்பட்டது போக குறைவான நிதி இருப்பில் உள்ளதால் 02/2022 வரை இக்கணக்கில் செலவினம் மேற்கொள்ள ரூ.50,00,000 /- சேர்க்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 625 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**20.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை செயல்முறை உத்தரவு ந.க.எண்.2639/2019/கே3, நாள்.10.03.2020ன் படி திரு.மு. அருள்மொழி, உதவியாளருக்கு வகுப்பு V இல் இருந்து வகுப்பு IV க்கு பதவி உயர்வு அளித்து, செங்கல்பட்டு நகராட்சிக்கு கணக்கராக பணிமாறுதல் செய்யப்பட்டதை தொடர்ந்து காஞ்சிபுரம் நகராட்சி பணியிலிருந்து விடுவித்தும், மீண்டும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.6513/2020/கே2, நாள்.12.03,.2020 இல் சென்னை உயர் நீதிமன்ற வழக்கு W.P.35083/2019-ன்படி “to maintain the status quo”-கடைபிடிக்க அறிவுறுத்தப்பட்டு மீண்டும் வகுப்பு V இல் உதவியாளராக காஞ்சிபுரம் நகராட்சியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.6513/2020/கே3, நாள்.08.10.2021 உத்தரவில் திரு.மு.அருள்மொழி, உதவியாளர், காஞ்சிபுரம் மாநகராட்சி தவிர்த்து மீதமுள்ள 18 நபர்களுக்கு 08.10.2021 முதல் வகுப்பு V இல் இருந்து வகுப்பு IV க்கு பதவி உயர்வு அளித்து உத்தரவிடப்பட்டது. திரு.மு. அருள்மொழி, உதவியாளர் தனது பதவி உயர்வு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு (W.P.No.22946/2021, Contpt. P.No.588/2022) தொடர்ந்து முடிவுற்ற நிலையில், ஏற்கனவே பதவி உயர்வு தொடர்பாக நிலுவையாக இருந்த அசல் வழக்கு (W.P. No.35083/2019) முடிவுற்று 09.11.2022 உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை கடிதம் ந.க.எண்.30248/2021/மாநஅ-1ன் படி 01.12.2021 தரம் உயர்த்தப்பட்டதால், கருத்துரு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டதன் பேரில். திரு.மு. அருள்மொழி, உதவியாளர் தனக்கு வகுப்பு V ல் இருந்து வகுப்பு IVக்கான பதவி உயர்வு தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள நிலுவை வழக்குகள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவுகளை எதிர்நோக்கி மாநகராட்சிப் பணியில் தொடர விருப்பம் தெரிவித்துள்ளதன் பேரில் மாநகராட்சி பணியில் தொடர்பவர்களுக்கான விருப்பம் தெரிவித்துள்ளவர்களுக்கான பட்டியலில் வ.எண்.3 இல் சேர்த்து மாநகர மன்ற தீர்மான எண்.338, நாள்.31.12.2021 இல் அனுமதி பெற்று ஏற்கனவே கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 கடிதம் ந.க.எண்.6513/2022/கே2, நாள்.07.12.2022ம் தேதிய கடிதத்தில் திரு.மு. அருள்மொழி, உதவியாளர், நகராட்சி பணிக்கு செல்ல சம்மதம் தெரிவித்துள்ளதால், காஞ்சிபுரம் மாநகராட்சி பணிக்கு ஈர்த்துக்கொள்ள அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள கருத்துருவிலிருந்து தனியரின் பெயரை நீக்கம் செய்து மாமன்ற தீர்மானம் பெற்று அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஏற்கனவே அளித்துள்ள விருப்பக் கடிதம் மாநகராட்சி பணியில் தொடர்வதற்கான விருப்பக் கடிதமாக கருதப்படுவதாலும், திரு.மு. அருள்மொழி, உதவியாளருக்கு ஏற்கனவே பதவி உயர்வு அளித்து, நிறுத்தப்பட்டுள்ளதாலும், தற்போது பதவி உயர்வில் முன்னுரிமை பாதிக்கும் என்பதால், பதவி உயர்வு அடிப்படையில் நகராட்சிப் பணிக்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ளார். எனவே, ஏற்கனவே மாநகராட்சி பணிக்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ளவர்கள் பட்டியலில் வ.எண்.3 இல் உள்ள திரு.மு.அருள்மொழி, உதவியாளர் பெயரினை நீக்கம் செய்தும், நகராட்சி பணிக்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ளவர்களின் பட்டியலில் வ.எண்.14 இல் சேர்த்து திருத்திய கருத்துருவினை உரிய வழிமுறையாக அரசுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.14051/2021/சி1)

**தீர்மான எண். 626 அனுமதி அளிக்கப்பட்டது.**

**21.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 ல் அமைந்துள்ள விளக்கடி கோயில் தெருவின் சாலையில் ஆங்காங்கே பழுது ஏற்பட்டு உள்ளதால், மேற்படி சாலையில் பழுதுகளை சரிசெய்து பேவர் பிளாக் பதிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.05 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

***தீர்மான எண். 627 அனுமதி அளிக்கப்பட்டது.***

**22.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14ல் அமைந்துள்ள அண்ணா பூங்காவின் உட்புறம் பாதுகாப்பு கருதி சி.சி.டி.வி. கேமரா பொருத்தும் பணி, S.S. பெயர் பலகை வைத்தல், பூச்செடிகள் வைத்தல் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் வாங்கி வழங்குதல் முதலிய பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

***தீர்மான எண். 628 அனுமதி அளிக்கப்பட்டது.***

**23.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் செய்தித்தாள் விளம்பரம் செலவுகள் மேற்கொள்ள கணக்கு தலைப்பு எண்.2206001 (Advertisement Charges) இதன் தலைப்புக்கு 2022-2023க்கான வரவு செலவு திட்டத்தின் கீழ் செலவு செய்யப்பட்டு வருகிறது. மேற்படி தலைப்பில் ஏற்கனவே ரூ.1,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், பொது சுகாதாரப் பிரிவில் செய்தித்தாள் விளம்பர செலவுகள் மேற்கொள்ள கூடுதலாக ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.11480/2022/எச்4)

***தீர்மான எண். 629 அனுமதி அளிக்கப்பட்டது.***

**24.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் கீழ்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளிகள் கோர கால அவகாசம் இல்லாத காரணத்தால் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு உரிய செலவினம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | பணியின் மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் மாநகராட்சியில் 2022-ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலின் போது வாக்கு எண்ணும் மையமான அறிஞர் அண்ணா பல்கலை கழக வளாகத்தில் புதர்களை அகற்றி சாலையை புதுப்பிக்கவும் வாக்கு பெட்டிகள் வைப்பறை (Strong Room) மற்றும் வாக்கு எண்ணிக்கை அறை ஆகியவற்றுக்கு வண்ணம் தீட்டி புதுப்பித்தல் பணியினை மேற்கொள்ளுதல் | 5.20 | 5,14,923/- | திரு.P.விஜயரகுநாதன் |

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.314/2021/இ1)

**தீர்மான எண். 630 பதிவு செய்யப்பட்டது.**

**25.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் **15வது மான்ய நிதி 2020-2021**-ன் கீழ் களத்துhர் கிராமம் முதல் சங்கரம்பாடி கிராமம் வரை குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகளை மேற்கொள்ள 22.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள மாமன்ற தீர்மான எண்.287 நாள்.30.06.2022ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திருவாளர். N.P.G.பிரதர்ஸ், என்பவருக்கு பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று 27.06.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இம்மாநகரத்தின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் மேற்கொள்ள மாமன்றத்தால் முடிவு செய்யப்பட்டு இந்நகரின் தற்போதைய குடிநீர் ஆதார நிலையினை புதுப்பிக்கவும், புதிய குடிநீர் ஆதாரங்களை உருவாக்கவும், பிரதான குடிநீர் குழாய்கள் பதித்தல், பகிர்மான குழாய்கள் பதித்தல், மின் மோட்டார்கள் புதியதாக அமைத்தல், அதற்கான நீரேற்று நிலையங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் போன்ற பல்வேறு கட்டமைப்பு பணிகளை உருவாக்க M/S. SSS Engineering, சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநகரகத்தின் ஒப்புதலுடன்மேற்கண்ட நிறுவனத்திற்கு மாமன்ற தீர்மான எண்.270, நாள்.30.06.2022 ல் அனுமதி பெறப்பட்டு மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் 07.06.2022ம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

மேற்கண்ட ஆய்வின்போது களத்துhர் கிராமம் முதல் சங்கரம்பாடி கிராமம் வரை ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பிரதானக் குழாய்களை கணக்கிடப்பட்டதில் அவை பதிக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கும் மேலானபடியால் இப்பிரதான குழாய்கள் குறித்து பல்வேறு கருத்துக்கள் மேற்படி நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டு அதற்கான விட்டம் மற்றும் குழாய் பதிக்கப்படும் பகுதியினை தற்போதைய வளர்ச்சிக்கு ஏற்றவாறு மாற்று பாதையில் அமைக்க பரிந்துரை செய்துள்ளதாலும், புதிய வடிவமைப்புக்கு ஏற்றவாறு நிலத்தின் மட்டம் மற்றும் பதித்தல் போன்ற பல்வேறு வேறுபாடுகள் ஏற்பட்டதால் 15-வது மானிய நிதிக் குழும திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்காணும் 7 பணிகளை மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டது. தற்பொழுது M/s. SSS Engineering நிறுவனம் 01.12.2022ம் தேதியில் காஞ்சிபுரம் மாமன்ற கூட்ட அறங்கில் வணக்கத்திற்குரிய மேயர் தலைமையில் திட்ட வரைவு குறித்து ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் பல்வேறு கருத்துருக்கள் வழங்கப்பட்டு அதனடிப்படையில் TUFICEL நிறுவனத்தில் 02.12.2022ம் தேதியில் திட்ட வரைவு தாக்கல் செய்யப்பட்டு தற்பொழுது அதற்கான நிதி ஒதுக்கீடு கோரி உலக வங்கி அலுவலர்களுடன் 06.12.2022ம் தேதியில் மீண்டும் திட்ட வரைவு குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. அதனடிப்படையில் ஏற்கெனவே திட்ட வரைவில் இதற்கான நிதி ஒதுக்கீடு திட்ட மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளதால் **15-வது மான்ய நிதி 2020-2021** ல் கீழ்காணும் பட்டியலில் குறிப்பிடப்பட்டு பணிகளை மட்டும் ரத்து செய்து அதற்கு ஈடாக மாற்று பணிகளை தேர்வு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**15-வது நிதிக்குழு மானிய நிதி திட்டம் - 2020-21**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| | **2020–21** | |
| 1 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு களத்தூர் கிராமம் உள்நுழைவாயிலிருந்து (OHT) கி.மீ. கல் எண்-6 (2/6) வரை 600 மி.மீ. DIS/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி (சிப்பம் I) | 50.00 |
| 2 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு களத்தூர் கிராமம் கி.மீ கல் எண் -6 (2/6) லிருந்து களத்தூர் கால்நடை மருத்துவமனை வரை 600 மி.மீ. DIS/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி. (சிப்பம் II). | 50.00 |

| | | |
|---|---|---|
| 3 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு களத்தூர் கிராமம் கால்நடை மருததுவமனை முதல் இராஜா முதலியார் அறிவியல் பரிசோதனை கூடம் வரை 600 மி.மீ. DIS/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி (சிப்பம் III). | 50,00 |
| 4 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு இராஜா முதலியார் அறிவியல் பரிசோதனை கூடம் முதல் அம்பேத்கர் பெயர் பலகை வரை 600 மி.மீ. DIS/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி (சிப்பம் IV). | 50,00 |
| 5 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு அம்பேத்கர் பெயர் பலகை முதல் பஜனை கோயில் தெரு வரை 600 மி.மீ. DIS/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி (சிப்பம் V). | 50.00 |
| 6 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு பஜனை கோயில் தெரு முதல் பொது கழிப்பிடம் வரை 600 மி.மீ. DIS/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி (சிப்பம் VI). | 50,00 |
| 7 | காஞ்சிபுரம் மாநகரட்சிக்கு களத்தூர் பொது கழிப்பிடம் முதல் சங்கரம்பாடி மின்தேக்கி (Transformer) வரை 600 மி.மீ. DIS/S K7 பிரதான குழாய் பதித்தல் பணி (சிப்பம் VII). | 55.00 |

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மாற்று பணிகள் தேர்வு செய்யவும் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.13359/2021/இ1)**

**தீர்மான எண். 631 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**26.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு 1 முதல் 51 வரையிலான பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் கொரோனா நோய் தொற்று பரவாமல் தடுக்கும் விதமாக பணிகளை மேற்கொள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தற்காலிக பணியாளர்களை மாமன்ற தீர்மான எண்.559, நாள்.25.12.2022ன் படி முடிவடைகிறது. மேலும் பொது சுகாதாரப்பிரிவில் இன்றியமையாத பணிகளான திடக்கழிவு மேலாண்மை திட்டம் கொரோனா நோய் தொற்று, டெங்கு காய்ச்சல் முதலிய பணிகளின் அவசர அவசியம் கருதி மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தற்போது 80 தற்காலிக தினக்கூலி பணியாளர்களை மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களது 2021-2022 ஆம் ஆண்டு தினக்கூலி விலை விகித அடிப்படையில் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ. 370/- வழங்கவும், டிசம்பர் 26.12.2022 முதல் 89 நாட்களுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 28.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு அவர்களது மாதாந்திர மதிப்பூதியம் அவரவர் சொந்த வங்கி கணக்கில் செலுத்த மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதி எதிர்நோக்கி நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தமைக்கும் பணி செய்தமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 5220/2016/எச்1)

**தீர்மான எண். 632 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**27.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு இம்மாநகர பகுதியில் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை அகற்ற காம் அவிடா, பூனே என்ற நிறுவனம் மூலம் பராமரிப்பு முறையில் 7 காம்பாக்டர் லாரிகள் மற்றும் 1 ஹூக் லோடர் லாரிகள், பயன்படுத்தப்பட்டு தற்போது 07.09.2022 அன்று இந்நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த பணிகள் முடிவடைந்துவிட்டது. தற்போது பொது சுகாதாரப்பிரிவில் உள்ள திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு வாகனங்களை இயக்க போதுமான ஓட்டுநர்கள் இல்லை. எனவே, துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் தெரிவித்துள்ளபடி அன்றாடம் சேகரமாகும் குப்பைகளை உடனுடக்குடன் அப்புறப்படுத்தி உரக்குடில்கள், உரக்கிடங்கிற்கும் மறுசுழற்சி பணிக்கு நத்தப்பேட்டை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்ல வேண்டி உள்ளதாலும், மேற்படி காம் அவிடா நிறுவனத்தில் பணிபுரிந்த ஓட்டுநர்களில் 8

ஓட்டுநர்களை மட்டும் தினக்கூலி அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2022-23 ம் ஆண்டில் விலை விவர பட்டியலின் படி (Schedule of rate) ரூ.445/- நாள் ஒன்றுக்கு என்ற வீதம் 08.09.2022 முதல் 06.12.2022 வரை 89 நாட்களுக்கு தோராயமாக ரூ.3.20 இலட்சம் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி மேலும் 07.12.2022 முதல் 6 மாதத்திற்கு 4 தற்காலிக ஓட்டுநர்களை வைத்து பணி நீட்டிப்பு செய்ய அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.3.30 இலட்சம் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான பட்டியல் தொகை பொது நிதியிலிருந்து வழங்கியதற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.
2. பொது சுகாதார பிரிவில் உள்ள வாகனங்களை இயக்க போதுமான ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் நிறுவனம் மூலம் இயக்கப்பட்ட வாகனங்களுக்கு அதே ஓட்டுநர்களில் 4 ஓட்டுநர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் நியமித்து மாவட்ட ஆட்சியர் 2022-23ம் ஆண்டு விலை விவரப்படி பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கும் மற்றும் செலவினத்திற்கும் மாமன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 7690/2022/எச்1)

**தீர்மான எண். 633 அலுவலக குறிப்பின்படி பதிவு செய்யப்பட்டது.**

**28.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் பாதாள சாக்கடை அடைப்பு நீக்க பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண்.TN21G 0146யில் இன்ஜின் பழுது ஏற்பட்டுள்ளதால் வாகனம் இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி வாகனத்தின் பழுதினை சரி செய்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.49 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :-

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.10634/2022/இ2)

**தீர்மான எண். 634 அனுமதி அளிக்கப்பட்டது.**

**29.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் தமிழ்நாடு அரசு முதன்மை செயலாளர் தலைமைச் செயலகம் அவர்களின் நே.மு.க.எண்.30/OSD/2021 நாள்.15.09.2021-ல் தெரிவித்துள்ளதின்டி நகராட்சி பகுதிகளில் 100 இடங்களில் 7 நாட்களுக்கு நாள் வாடகை அடிப்படையில் கொரோனா தடுப்பூசி செலுத்த சிறப்பு முகாம்கள் நடத்த தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி 100 முகாம்களுக்கு தேவையான சாமியானா பந்தல், மேசை, நாற்காலிகள் மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் "மெசர்ஸ் மகேந்திரன் சப்ளையர்ஸ், காஞ்சிபுரம் " அவர்கள் மூலம் பணி மேற்கொண்டமைக்கான செலவு தொகை ரூ.8,36,132/-ஐ வழங்கிட, மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :-

பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

.(ந.க.எண்.314/2022/இ1)

**.தீர்மான எண். 635 அனுமதி அளிக்கப்பட்டது.**

**30.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4, அப்பாராவ் தெரு, வார்டு எண். 5, இராயன் குட்டை பள்ள தெரு மற்றும் வார்டு எண்.6-ல் அமைந்துள்ள தந்தை பெரியார் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகள் ஆங்காங்கே குண்டும் குழியுமாக பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூராக

உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி , மேற்படி இடத்தில் சிமெண்ட் கான்கிரீட் கொண்டு பேட்ச் அமைக்கும் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

***தீர்மான எண். 636 அனுமதி அளிக்கப்பட்டது.***

**31.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, பஞ்சுபேட்டை சின்ன தெரு, வார்டு எண். 2, ஏகாம்பரபுரம் (செவ்வந்தீஸ்வரர் கோயில் தெரு) மற்றும் வார்டு எண்.3-ல் அமைந்துள்ள பெருமாள் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகள் ஆங்காங்கே குண்டும் குழியுமாக பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூராக உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி , மேற்படி இடத்தில் சிமெண்ட் கான்கிரீட் கொண்டு பேட்ச் அமைக்கும் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

***தீர்மான எண். 637 அனுமதி அளிக்கப்பட்டது.***

**32.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, வெள்ளைகுளம் தெரு, (சந்தவெளியம்மன் கோயில் பின்புறம்) வார்டு எண். 11, திருவேங்கம்பன் தெரு மற்றும் வார்டு எண்.16-ல் அமைந்துள்ள ஒக்கபிறந்தான் குளம் புது தெரு, ஒக்கபிறந்தான் குளம் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகள் ஆங்காங்கே குண்டும் குழியுமாக பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூராக உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி , மேற்படி இடத்தில் சிமெண்ட் கான்கிரீட் கொண்டு பேட்ச் அமைக்கும் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

***தீர்மான எண். 638 அனுமதி அளிக்கப்பட்டது.***

**33.** இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இன்றியமையாத பணிகளான திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி பணிக்கு பயன்பாட்டில் உள்ள TN 21 AM 1663 JCB வாகனத்திற்கு புதிய டயர் (ம) டியூப்கள் மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்வதற்கு தோராய செலவினம் பொது நிதியிலிருந்து ரூ. 4.50 இலட்சம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். 12054/2022/எச்1)

***தீர்மான எண். 639 அனுமதி அளிக்கப்பட்டது.***

**34.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 51 வார்டு பகுதிகளிலும் சேகரமாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகளை தூய்மை பணியாளர்களை கொண்டு பிரித்து சேகரித்து நத்தப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள மூன்று உரக்குடில் மற்றும் செவிலிமேடு பகுதியில் உள்ள ஒரு உரக்குடிலில் மக்கும் கழிவுகளை உரமாக்கும் பணிகள் மேற்கொள்ளவும், மக்காத கழிவுகளை எரியூட்டுவதற்கு, தொழிற்சாலைகளுக்கு அனுப்பிட BAILING இயந்திரத்தின் மூலமாக மக்காத மறுசுழற்சிக்கு உதவாத கழிவுகளை மூட்டைகளாக கட்டிடவும் பணியாளர்கள் தேவைப்படுவதால் நவம்பர் 2022 முதல் 6 மாத காலத்திற்கு மகளிர் சுய உதவிக்குழு

மூலமாக 20 தற்காலிக பணியாளர்களை மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களது 2021-2022 ஆம் ஆண்டு தினக்கூலி விலை விகித அடிப்படையில் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.370/- (CASUAL LABOUR) ஊதியம் அடிப்படையில் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 14.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மகளிர் சுய உதவிக்குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு பணியாளர்களுக்கு (தாமரை மலர், அல்லி, குழல் இசை) அவர்களது மாதாந்திர மதிப்பூதியம் அவரவர் குழு வங்கி கணக்கில் செலுத்த மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதி எதிர்நோக்கி நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தமைக்கும் பணி செய்தமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 12744/2022/எச்1)

***தீர்மான எண். 640  அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.***

**35.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இன்றியமையாத பணிகளான திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள், டெங்கு காய்ச்சல், சிக்கன் குனியா போன்ற நோய் தடுப்பு பணிகள் மற்றும் நோய் தொற்று ஏற்படுத்தும் வீடுகளில் பாதிப்பு ஏற்படாத வண்ணம், பணிகள் மேற்கொள்வதற்கும் மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும், கால்வாய் தூர்வாரும் பணிகளின் போதும், கழிவுநீர் கால்வாய் அருகாமையிலும் நோய் தொற்று ஏற்படாமல் இருக்கவும், எதிர்வரும் பொங்கல் விழா காலங்களில் ஜனவரி 26 குடியரசு தின விழாவினை முன்னிட்டு அனைத்து கல்வி நிறுவனங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்வது அவசியம் என்பதால், தற்போது நீர்த்த சுண்ணாம்பு இருப்பு குறைவாக உள்ளதால், நீர்த்த சுண்ணாம்பு 30.00 மெட்ரிக் டன் வாங்கி வழங்கவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் பொது நிதியிலிருந்து ரூ.3.50 இலட்சம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். 13030/2022/எச்1)

***தீர்மான எண். 641  அனுமதி அளிக்கப்பட்டது.***

**36.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இன்றியமையாத பணிகளான திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள், டெங்கு காய்ச்சல், சிக்கன் குனியா போன்ற நோய் தடுப்பு பணிகள் மற்றும் நோய் தொற்று ஏற்படுத்தும் வீடுகளில் பாதிப்பு ஏற்படாத வண்ணம், பணிகள் மேற்கொள்வதற்கும் மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும், கால்வாய் தூர்வாரும் பணிகளின் போதும், கழிவுநீர் கால்வாய் அருகாமையிலும் நோய் தொற்று ஏற்படாமல் இருக்கவும், எதிர்வரும் பொங்கல் விழா காலங்களிலும் ஜனவரி 26 குடியரசு தின விழாவினை முன்னிட்டு அனைத்து கல்வி நிறுவனங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்வது அவசியம் என்பதால், தற்போது பிளீச்சிங் பவுடர் இருப்பு குறைவாக உள்ளதால், பிளீச்சிங் பவுடர் 10 மெட்ரிக் டன் வாங்கி வழங்கவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் பொது நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மாமன்ற அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.13031/2022/எச்1)

***தீர்மான எண். 642  அனுமதி அளிக்கப்பட்டது.***

**37.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் கீழ்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளிகள் கோர கால அவகாசம் இல்லாத காரணத்தால் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு

15-ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு உரிய செலவினம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | பணியின் மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | விளக்கடி கோயில் தெருவில் கதவு எண். 65B, திருமதி. A. உமாமகேஸ்வரி க/பெ ஹரிகிருஷ்ணன் என்பவர் அனுமதியற்ற கட்டிய கட்டிடத்தை உடனடியாக இடித்து அப்புறப்படுத்த மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்திரவு WP.No. 34133/2017 நாள்03.09.2018 மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண். 1550/2019 நாள். 09.02.2020 ஆகிய உயர் நீதிமன்ற உத்திரவில் உத்திரவிடப்பட்டுள்ள பணியினை மேற்கொள்ளுதல். | 1.40 | 1,40,000/- | திரு. P.விஜயரகுநாதன் |

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. 314/2021/E1)**

**தீர்மான எண். 643 பதிவு செய்யப்பட்டது.**

**38.** காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் நீரேற்று நிலையங்களுக்கு தற்காலிக மின்னாக்கி வாடகை அடிப்படையில் விநியோகம் செய்யும் பணியின், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15-ன் கீழ் குறிப்பிட்ட இடங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | பணியின் மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | வேகவதி பூஸ்டர் நிலையம் ஓரிக்கை, தேனம்பாக்கம், செவிலிமேடு மற்றும் வெங்கடாபுரம் ஆகிய இடங்களிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் நீரேற்று நிலையங்களுக்கு தற்காலிகமாக மின்னாக்கி வாடகை அடிப்படையில் விநியோகம் செய்தல். | 4.90 | 4,88,853/- | திரு. P.விஜயரகுநாதன் |

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எ.314/2021/இ1)

**தீர்மான எண். 644 பதிவு செய்யப்பட்டது.**

**39.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள 16.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| | சுகாதார பிரிவு | | | | |
| 1 | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண். | 3.10 | M/S. S.K. Motors,Chennai | – | 0.01% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | TN 21 M 3294 Compactor Lorry க்கு தகுதிச்சான்று புதுப்பித்திடும் பணி. | | M/S A.R.V Body Builders, Chennai | 7.81% | – |
| 2 | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண். TN 21 H 2646 TiPPer Lorry க்கு தகுதிச்சான்று புதுப்பித்திடும் பணி. | 3.50 | M/S. S.K. Motors,Chennai | – | 0.01% |
| | | | M/S A.R.V Body Builders, Chennai | 3.22% | – |
| 3 | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண். TN 21 BC 3749 Compactor Lorry க்கு தகுதிச்சான்று புதுப்பித்திடும் பணி. | 3.75 | M/S. S.K. Motors,Chennai | – | 0.01% |
| | | | M/S A.R.V Body Builders, Chennai | 3.59% | – |
| 4 | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண். TN 21 AM 5369 TATA ACE க்கு தகுதிச்சான்று புதுப்பித்திடும் பணி. | 1.80 | M/S. S.K. Motors,Chennai | – | 0.01% |
| | | | M/S A.R.V Body Builders, Chennai | 4.16% | – |
| | பொறியியல் பிரிவு | | | | |
| 1 | பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE வாகனம் எண். TN 21 BL 6608 (Desilting Auto) வாகனத்தில் உள்ள பழுதுகளை பழுதுநீக்கம் செய்து தகுதிச் சான்று பெற்று தருதல் பணி. | 1.49 | M/S Sai Ragavendra Industries, Chennai | – | 0.01% |
| | | | M/S Ultra jet Industrial Cleaning System Pvt. Ltd., | 8.33% | – |
| 2 | குடிநீர் வாகனம் பதிவு எண். TN 21 G 0147 பழுதுகள் சரி செய்து தகுதிச் சான்று பெற்று தருதல் பணி. | 3.15 | M/S Sai Ragavendra Industries, Chennai | – | 0.01% |
| | | | M/S Ultra jet Industrial Cleaning System Pvt. Ltd., | 3.76% | – |
| 3 | பாதாளச் சாக்கடை திட்டப் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண். TN 21 BL 6743 (Desilting Auto) க்கு தகுதிச் சான்று புதுப்பித்திடும் பணி. | 1.50 | M/S Sai Ragavendra Industries, Chennai | – | 0.01% |
| | | | M/S Ultra jet Industrial Cleaning System Pvt. Ltd., | 8.33% | – |
| 4 | புதைவடிகால் அடைப்பு நீக்கம் வாகனம் எண்.TN 21 AM 4280 க்கு பழுதுகள் பார்த்து தகுதிச் சான்று பெற்று தருதல் பணி. | 4.50 | M/S Sai Ragavendra Industries, Chennai | – | 0.01% |
| | | | M/S Ultra jet Industrial Cleaning System Pvt. Ltd., | 8.60% | – |

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தபுள்ளி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1001/2022/இ2)

**தீர்மான எண். 645 அலுவலக குறிப்பின்படி அனுமதி வழங்கப்பட்டது.**

**40.** மாநகராட்சிகள் / நகராட்சிகளின் பொறுப்பிலுள்ள பாழடைந்த நிலையில் உள்ள பள்ளி கட்டடங்கள், சமையற் கூடங்கள், நூலக கட்டடங்கள், கழிப்பிட வளாகங்கள், அலுவலக கட்டடங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவைகளை காலங்கடந்த நிலையிலோ அல்லது பல்வேறு சூழ்நிலைகளில் சில கட்டிடங்கள் பழுதடைந்திருப்பின் அவைகளை இடித்து அப்புறப்படுத்துதல் தொடர்பாக அரசால் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பான அரசாணை (நிலை) எண்.174, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.5(1)) துறை, நாள்.14.12.2022 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (ந.க.எண்.13145/2022/எப்1)

**தீர்மான எண். 646 பதிவு செய்யப்பட்டது.**

**41.** நகர் ஊரமைப்பு சட்டப் பிரிவுகள் 56, 57 மற்றும் 80A–ன்படி அனுமதியற்ற அபிவிருத்திகள் மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் வழிமுறை படுத்துதலுக்கான விதிகள் பிரசுரிக்கப்பட்டது தொடர்பான நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.8621/2022/டிபி2, நாள்.22.12.2022 மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை (நிலை) எண்.195 நாள்.05.11.2022 ஆகியவற்றை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (ந.க.எண்.13144/2022/எப்1)

**தீர்மான எண். 647 பதிவு செய்யப்பட்டது.**

**42.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.38 பகுதியில் வேகவதி ஆற்றின் குறுக்கே 2 சிறுபாலம் / தரைபாலங்கள் உள்ளது. வேகவதி ஆற்றில் திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட காரணத்தால், அப்பகுதியின் கரையோர பகுதியில் வசிக்கும் குடியிருப்பு பகுதியில் வெள்ள நீர் புகுந்தது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வின் போது தெரிவித்துள்ள அறிவுரைகளின்படியும், மாநகராட்சி ஆணையர் / பொறியாளர் ஆகியோரின் நேரடி அறிவுரைகளின்படியும் JCB / HITACHI இயந்திரங்கள் கொண்டு இடையூராக உள்ள இணைப்பு சாலைகள் துண்டிக்கப்பட்டு பொதுமக்களின் குடியிருப்பு பகுதிகள் பாதுகாக்கப்பட்டது.

பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு துண்டிக்கப்பட்டு உள்ள சாலைகளில் தற்போது போக்குவரத்து செயல்படாமல் உள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தாயார்குளம் இடுகாடு மற்றும் கல்வி நிறுவனங்கள் செல்வதற்கு மேற்படி துண்டிக்கப்பட்ட சாலையினை RCC பைப் அமைத்தும் தடுப்பு சுவர் / சாலை அமைத்தும் போக்குவரத்து சீர் செய்ய வேண்டி உள்ளது.

எனவே, அவசர அவசியம் கருதி தற்காலிகமாக மாநகராட்சி மூலம் தாயார்குளம் செல்லும் பாதையில் உள்ள தரைப்பாலம் புதுப்பிக்கும் பொருட்டு பொதுமக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் கோரியுள்ளனர். ஆதலால் மேற்படி கோரிக்கைக்கு இணங்க, உத்தேசமாக தயார் செய்துள்ள மதிப்பீடு தொகை ரூ.4.70 இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 648 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**43.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.38 பகுதியில் வேகவதி ஆற்றின் குறுக்கே 2 சிறுபாலம் / தரைபாலங்கள் உள்ளது. வேகவதி ஆற்றில் திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட காரணத்தால், அப்பகுதியின் கரையோர பகுதியில் வசிக்கும் குடியிருப்பு பகுதியில் வெள்ள நீர் புகுந்தது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வின் போது தெரிவித்துள்ள அறிவுரைகளின்படியும், மாநகராட்சி ஆணையர் / பொறியாளர் ஆகியோரின் நேரடி அறிவுரைகளின்படியும் JCB / HITACHI இயந்திரங்கள் கொண்டு இடையூராக உள்ள இணைப்பு சாலைகள் துண்டிக்கப்பட்டு பொதுமக்களின் குடியிருப்பு பகுதிகள் பாதுகாக்கப்பட்டது.

பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு துண்டிக்கப்பட்டு உள்ள சாலைகளில் தற்போது போக்குவரத்து செயல்படாமல் உள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தாயார்குளம் இடுகாடு மற்றும் கல்வி நிறுவனங்கள் செல்வதற்கு மேற்படி துண்டிக்கப்பட்ட சாலையினை RCC பைப் அமைத்தும் தடுப்பு சுவர் / சாலை அமைத்தும் போக்குவரத்து சீர் செய்ய வேண்டி உள்ளது.

எனவே, அவசர அவசியம் கருதி தற்காலிகமாக மாநகராட்சி மூலம் சுடுகாடு செல்லும் பாதையில் உள்ள தரைப்பாலம் புதுப்பிக்கும் பொருட்டு பொதுமக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் கோரியுள்ளனர். ஆதலால் மேற்படி கோரிக்கைக்கு இணங்க, உத்தேசமாக தயார் செய்துள்ள மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

***தீர்மான எண். 649 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.***

**44.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.51 பகுதியில் வேகவதி ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் உள்ளது. வேகவதி ஆற்றில் திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட காரணத்தால், தேனம்பாக்கம் மிலிட்டரி சாலை துண்டிப்பு ஏற்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வின் போது தெரிவித்துள்ள அறிவுரைகளின்படியும், மாநகராட்சி ஆணையர் / பொறியாளர் ஆகியோரின் நேரடி அறிவுரைகளின்படியும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு துண்டிக்கப்பட்டு உள்ள சாலைகளில் தற்போது போக்குவரத்து செயல்படாமல் உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே துண்டிக்கப்பட்ட சாலையினை RCC Slab அமைத்தும் தடுப்பு சுவர் அமைத்தும் போக்குவரத்து சீர் செய்ய வேண்டி உள்ளது.

இதனை உடனடியாக புதுப்பித்து தருமாறு பொதுமக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் கோரியுள்ளனர். ஆதலால் மேற்படி கோரிக்கைக்கு இணங்க, உத்தேசமாக தயார் செய்துள்ள மதிப்பீடு தொகை ரூ.9.80 இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 650 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**45.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.42ல் அமைந்துள்ள செவிலிமேடு மற்றும் வெங்கடாபுரம் பகுதியில் உள்ள பள்ளிக்கூடங்களை சீரமைத்தல் மற்றும் கட்டிடங்களுக்கு வண்ணம் பூச கோரி மாமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி பணிக்கு தயார் செய்துள்ள மதிப்பீடு தொகை ரூ.8.60 இலட்சத்தை மாநகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 651 அனுமதி வழங்கப்பட்டது.**

**46.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.40, பல்லவன் நகர் பகுதியில் அமைந்துள்ள நகர்புற சுகாதார நிலையம் மற்றும் மேல்நிலை தொட்டி ஆகிய பகுதிகள் உட்பட்ட வளாகத்தில் புதர்கள் அதிக அளவில் உள்ளதாலும், மிகவும் பள்ளமான பகுதியாக உள்ளதாலும் பொதுமக்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, பொதுமக்களின் சுகாதார நலன் கருதி, மேற்படி இடத்தினை சுத்தம் செய்து, சிமெண்ட் தளம் அமைத்து தருமாறு மாமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். எனவே, மேற்படி பணிகளை செய்ய உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சத்தை மாமநகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 652 அனுமதி வழங்கப்பட்டது.**

**47.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 51 வரை உள்ள தெருக்களில் புயர் மற்றும் கன மழை எச்சரிக்கை காரணமாக ஆபத்தான நிலையில் உள்ள மரக்கன்றுகள் அகற்றி, பொதுமக்களுக்கு பாதுகாப்பினை உறுதி செய்திட வேண்டுமென மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். எனவே, பொதுமக்களின் நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதியும் ஆபத்தான நிலையில் உள்ள மரக்கிளைகளை அகற்றிட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.0.95 இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியின் கீழ் செய்தமைக்கு, மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.K.சரவணன் அவர்கள் மூலம் பணி ஒப்படைப்பு முறையில் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 653 பதிவு செய்யப்பட்டது.**

**48.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22 கீழ் பணிகளை மேற்கொள்ள 15.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | ஓரிக்கை காந்தி நகர் வார்டு எண்.46 பகுதியில் ஆர்.சி.சி. பேருந்து நிழற்குடை அமைத்தல் | 14.50 | M/s Elango Electrical Works | - | 0.21% |
| | | | M/s VTN Groups | 0.24% | - |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.9927/2022/இ1)**

***தீர்மான எண். 654 அனுமதி வழங்கப்பட்டது.***

**49.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-23 ன் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள 21.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | ஆசிரியர் நகர் (45 வட்டம்) காஞ்சிபுரம் மாநகராட்சி புதிய நியாய விலை கடை கட்டிடம் கட்டுதல். | 16.57 | M/s VTN Groups Kancheepuram | - | 0.02% |
| | | | S. Devarajan | 8/63% | - |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.10484/2022/இ1)**

***தீர்மான எண். 655 அனுமதி வழங்கப்பட்டது.***

**50.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 51 வார்டு பகுதிகளிலும் சேகரமாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகளை தூய்மை பணியாளர்களை கொண்டு பிரித்து சேகரித்து நத்தப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள மூன்று உரக்குடில் மற்றும் செவிலிமேடு பகுதியில் உள்ள ஒரு உரக்குடிலில் மக்கும் கழிவுகளை உரமாக அரைத்து செயல்முறை மேற்கொள்ளவும், மக்காத கழிவுகளை தொழிற்சாலைகளுக்கு அனுப்பிட BAILING இயந்திரத்தின் மூலமாக மக்காத மறுசுழற்சிக்கு உதவாத கழிவுகளை எரியுட்டுவதற்கு ஏதுவாக மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தற்காலிக பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. மேற்படி உரக்குடில்களில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களது 2021-2022 ஆம் ஆண்டு தினக்கூலி விலை விகித அடிப்படையில் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.370/- வழங்கவும், மேற்படி தோராய செலவினம் ரூ. 9.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் பணியாளர்களுக்கு அவர்களது மாதாந்திர மதிப்பூதியம் அவரவர் சொந்த வங்கி கணக்கில் செலுத்த மாமன்றத்தின் அனுமதி கோர ஆணையர் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

<u>நத்தப்பேட்டை</u>

| வ.எண் | மாதம் | பணியாளர்கள் எண்ணிக்கை | பணிபுரிந்த நாட்கள் |
|---|---|---|---|
| 1 | ஜீலை 2022 | 17 | 397 |
| 2 | ஆகஸ்ட் 2022 | 19 | 446 |
| 3 | செப்டம்பர் 2022 | 10 | 248 |
| 4 | அக்டோபர் 2022 | 10 | 221 |

<u>செவிலிமேடு</u>

| வ.எண் | மாதம் | பணியாளர்கள் எண்ணிக்கை | பணிபுரிந்த நாட்கள் |
|---|---|---|---|
| 1 | ஜீலை 2022 | 8 | 248 |
| 2 | ஆகஸ்ட் 2022 | 8 | 248 |
| 3 | செப்டம்பர் | 10 | 248 |
| 4 | அக்டோபர் | 10 | 248 |

அலுவலகக் குறிப்பு :-

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதி எதிர்நோக்கி திடக்கழிவு மேலாண்மை பணி செய்தமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.5220/2016/எச்1)**

**தீர்மான எண். 656 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**51.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் தூய்மை இந்தியா பணிகள் (நகரம்) 2.O திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வளமீட்பு மையம் (Construction of Material Recovery Facilities) கட்டுமான பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண்.22083/2022/SBM2, நாள்.13.12.2022 ல் ரூ.1.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு (மொத்த மதிப்பீட்டில் மத்திய அரசு நிதி ரூ.0.56 இலட்சம், மாநிலஅரசு அரசு நிதி ரூ.0.37 இலட்சம் மற்றும் மீதம் மாநகராட்சி பங்குத் தொகையாக ரூ.0.77 இலட்சம்) மேற்படி திட்டம் நிறைவேற்றப்பட உள்ள இடம் தேர்வு செய்து அதற்கான மதிப்பீட்டு பிரேரணை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி கீழ்காணும் விவரப்படி வளமீட்பு மையம் (Construction of Material Recovery Facilities) கட்டுமான திட்டப்பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>**திடக்கழிவு மேலாண்மை திட்டம் (நகரம்) 2.O**</u>

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (கோடியில்) |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட திருவீதிபள்ளம் (சர்வே எண்.39/2) பகுதியில் வளமீட்பு மையம் (Construction of Material Recovery Facilities) கட்டும் பணி | 1.70 |

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. திட்ட நிதியிலிருந்து பணி மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.12875/2022/இ1 )**

**தீர்மான எண். 657** மன்றம் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. இத்திட்டப்பணி தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்தை தொடர்பு கொண்டதில் ஒரே பணியாக மேற்க்கொள்ளாமல் ரூ.42.50 இலட்சம் மதிப்பீட்டில் 4 பணிகளாக பிரித்து கீழ்கண்ட பகுதிகளில் பணி மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண். | இடத்தின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 28 | திருவீதிபள்ளம் பகுதியில் வளமீட்பு மையம் கட்டுதல் (5 TPT) | 42.50 |
| 2 | 30 | கல்லுக்குளம் பகுதியில் வளமீட்பு மையம் கட்டுதல் (5 TPT) | 42.50 |
| 3 | 44 | வள்ளலார் நகர், செவிலிமேடு பகுதியில் வளமீட்பு மையம் கட்டுதல் | 42.50 |

| | | | |
|---|---|---|---|
| | | (5 TPT) | |
| 4 | 20 | இராஜாஜி மார்கெட் பகுதியில் வளமீட்பு மையம் கட்டுதல் (5 TPT) | 42.50 |
| | | மொத்தம் | 170.00 |

**மாநகராட்சி அலுவலகம்,**
**காஞ்சிபுரம்.**
**நாள்.26.12.2022**

**(ஓம்) மூ. மகாலட்சுமி**
**மேயர்**
**காஞ்சிபுரம் மாநகராட்சி.**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**காஞ்சிபுரம் மாநகராட்சி.**